தி.ப. 4594

# ஞானமுதம்

திருப்பாதம்

காலயுகதி ஆனி 1978



அருள் 12

அமுது 8

கொழும்பு

# ஜிந்துப்பிட்டி ஸ்ரீ-சிவசுப்பிரமணிய ஸ்வாமி கோயில்

## கும்பாபிஷேகச் சிறப்பிதழ்


255.32
சிவசு
SL/PR

பதிப்பாசிரியர்
ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் ஸ்வாமிகள்
இளவரசு நல்லை ஆதீனம்

14-7-78

ஸ்ரீ திம்பிரிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய

ம



# ஸ்வாமி கோயில்

திருவாய் வருவாய்

அருள்வாய் இக்கணே



# கும்பாபிஷேக அனுபந்தம் 9-6-78

Arts Rajan

# திருநெறிய தெய்வீக மஹாநாடும்





25-5-92
SL/PR



மறைக் ... இறக்கும்
உற்சவத்தி ... அப்பர்னவா
மிகட்டும், சம்பந்த மூர்த்திக்கு
இளைவாசு ஆராதனை செய்தல்



ஞான சம்பந்தர்
திருமணக் கோலம்



ஞானப்பால் ஊற்ற
சுவத்திற்கு ஞான
சம்பந்த மூர்த்தி
எழுந்தருளல்



அகில இலங்கைத் திருநெறிய தெய்வீக மாநாடு ஆரம்ப விழாவில் தொழில் அதிபர் திரு கனகராஜா மங்கள விளக்கேற்றல்



ஆதீன இளவரசு முதல் நாள் மகாநாடு ஆரம்பம் செய்து வைத்தல்



யாழ்ப்பாணம் பேரவை
அழைப்பின் திரு யோகே
ஸ்வரன் மங்கள
விளக்கேற்றல்

4594


# மஹா யாகம்

பிரதமர்

கல்வி அமைச்சர்

## ஜெயந்திநகர்
## ஸ்ரீசிவசுப்பிரமணியர்
## கும்பாபிஷேக மஹாயாகம்

பிரதம சிவாச்சாரியார்
சாமி விஸ்வநாதக்குரு
அவர்கள்









இலங்கைப் பிரதமர் கௌரவ R. பிரேமதாஸா அவர்கள் கும்பாபிஷேகத்தன்று வழிபட வருகின்றார்கள்

கும்பாபிஷேகப் பிரதான யாக மண்டபமும் பிரதான கும்பமும்

கல்வி மந்திரி கௌரவ நிஸ்ஸங்கா விஜேரத்ன அவர்கள் கும்பாபிஷேகத்தன்று வழிபடல்

# பிரதான யாக பூஜை

கும்பாபிஷேகத்திற்கு ரக்ஷாபந்தனம் ஏற்ற திரு A.S.S. சோம-சுந்தரம் தம்பதிகள்





கும்பாபிஷேகத்தில் முன்னாள் பிரதமர்

பிரதான யாகசாலை பூஜையை சிவாகம சிரோமணி சாமி- ஸ்ரீனிவாச நாதக் குருக்கள், பிரதம குருவாக தலைமைதாங்கி நடத்துகின்றார்





"தந்தை மகற்காற்று முதவி அவையத்து முந்தி இருப்பச் செயல்" →

மகன் பாடுவதை தந்தை தாளம் போட்டு ரசிப்பதும், இதனைக் கேட்டு ரசிக்கும் பெருமக்களும்

# ஞானசம்பந்தர்

## விழா வீம்



திருமதி மங்கையர்க்கரசி இராமலிங்கம் உரையாற்றுகிறார்






பிரபல பட அதிபர் திரு. S.T.R. தியாகராஜா இளவரசுடன்



மஹாநாட்டின் முன்னாள் தலைவர் மேயர் திரு. ஆ. துரைராஜா இயக்கம்

செல்வி புஷ்பா செல்வநாயகம் உரையாற்றுகிறார்



ஆதீன மேலாளர்

திரு சை. சத்தியமூர்த்தி





தி. வ. திருத்தமிழ்ச்செல்வி உரையாற்றல்

ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளின் மாணவரான தம்பி Y.S. கண்ணசுந்தரம் கதாப்பிரசங்கம் நிகழ்த்துதல்





இளவரசு சுவாமிகளும் திரு S.T.R. வும் அருகில்

ஆதீனப் பண்ணிசை ஆசிரியர் திரு. சா. ஞானசம்பந்தனார் பண்ணிசைக் கச்சேரி நடத்துகின்றார்

உ
முருகா!

# ஜயந்தி நகர் முருகன்

## சமர்ப்பணம்

எமது ஆனி மாத அருளமுத இதழ் வெளிவரும் சமயம் எமது குருமணி தமது வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தை முடித்து, ஈழம் திரும்பியுள்ளனர். அவர்கள் ஈழம் வந்தவுடனேயே, கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிர மண்ய ஸ்வாமி கோயில் கும்பாபிஷேக விழாவையொட்டி முப்பெரும் புராண இன்னிசை அருளுரையை ஆற்ற தக்ஷீணத்தார் வேளாள மஹிமை பரிபாலன சபையார் வேண்டினர். 33 தினம் முப்பெரும் புராண விழாவாக ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள், கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடல் புராணம் ஆகிய மூன்று புராணங்களையும் இன்னிசை அருளுரை ஆற்ற முருகன் பேரருள் கூட்டியுளது. ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள் பூர்வாச்சிரமத்தில் இதே முருகன் ஆலயத்தில் 5-2-48 அன்று தமது முதல் விரிவுரையையாற்றினர். அதைத் தொடர்ந்து சென்ற 30 ஆண்டுகட்குள், கந்தபுராணம், ராமாயணம், பாரதம், திருவிளையாடல் ஆகிய பல தொடர் விரிவுரைகளையும், கூட்டு வழிபாட்டில், பல தனி விரிவுரைகளையும் ஆற்றியுள்ளனர். இதற்கு முன் நடந்த கும்பாபிஷேகத்திலும் ஸ்வாமிகளது விரிவுரையும், மதுரை மாரியப்ப ஸ்வாமிகளது இன்னிசைக் கச்சேரியும் இருந்தது குறிப்பிடத்தக்கது. ஆகவே இம்முறை ஆனி மாத அருளமுதத்தை ஜிந்துப்பிட்டி முருகனின் பாதத்தில் அருள் மலராக சமர்ப்பிக்கின்றோம்.

**ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்**
இளவரசு
(நல்லை ஆதீனம்)

---

**பாதமலர் மீது போதமலர் தூவி**
**பாடுமவர் தோழர் தம்பிரானே.**

# ஜயந்தி நகரில் அருள்பாலிக்கும் அதியற்புத முருக விக்கிரகம்

## திருச்செந்தூரிலிருந்து கொண்டுவரப்பட்டது

ஜிந்துப்பிட்டி ஜயந்தி நகர் ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி கோயில் முன்னூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பழம் பெரும் கோயிலாக விளங்குகின்றது.

கடந்த 45 வருடங்களாக இந்தக் கோயிலின் நிர்வாகத்தை தெக்ஷணத்தார் என்று பொதுவாக அழைக்கப்படும் தென் இந்திய சைவவேளாள வர்த்தக சங்கத்தினர் ஏற்றுச் சிறப்பாக நடத்தி வருகிறார்கள்.

### சக்தி வாய்ந்த தெய்வம்

இந்தக் கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் மூலவிக்கிரகமான முருகன் மிகுந்த சக்தி வாய்ந்த ஒரு தெய்வம் என்பதை கொழும்புவாழ் மக்கள் அனுபவ ரீதியாக அறிந்திருக்கிறார்கள்.

அந்த சிலை விக்கிரகம் கந்தப் பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருச்சீரலை வாய் என்னும் திருச்செந்தூர்ப் பகுதியிலிருந்து கடல் மார்க்கமாகப் பாய்க் கப்பலில் கொண்டு வரப்பட்டு, தவச் சிறப்புடையவரும், முருகன் பேரில் சிந்து பாடுவதில் வல்லவருமான ஒரு தென்னிந்தியப் பெரியாரால் ஸ்தாபனம் செய்யப் பட்டது என்பது கர்ண பரம்பரை வரலாறு ஆகும்.

சிந்து பாடியவர் வதிந்ததால் இன்று கோயில் அமைந்துள்ள பிரேதேசம் சிந்து பாடி என்று வழங்கப்பட்டிருக்கலாம். என்பதும் ஓர் ஐதீகமாகும்.

வாணியம் பாடி குறிஞ்சிப்பாடி சேவுகன் பாடி போன்ற பெயருடைய பதிகள் தென் இந்தியாவில் உள்ளன. அவற்றைப் போலவே சிந்துபாடியும் அமைந்திருக்கலாம்.

சிந்து என்பதே காலத்தால் மருவுற்று ஜிந்து பாடியாகி, பின்னர் ஜிந்து பட்டியாகி, ஜிந்துப்பிட்டியாகி இருக்கலாம். செயின்ட் ஜேமஸ்பிட்டிய என்பது தான் ஜிந்துப்பிட்டியானது என்று ஒரு சாரார் கூறும் விளக்கம் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

### சகலரும் வரும் ஸ்தலம்

ஜிந்துப்பிட்டி முருகன் இந்து மக்களுக்கு மட்டுமன்றி மற்றமதத்தைச் சார்ந்தவர்களுக்கும் வரமருளும் ஒரு கண்கண்ட தெய்வமாக விளங்குகிறார். இந்தக் கோயிலில் கிறிஸ்தவ மக்களும் பௌத்த மக்களும் நேர்த்தி செலுத்துவதை நிதம் நிதம் காணலாம்.

கொழும்பில் வதிகின்ற பெரும் சிங்கள வர்த்தகர்கள் இந்த ஆலயத்தில் பூஜைகளையும் அர்ச்சனைகளையும் ஹோமயாகங்களையும் வருடா வருடம் செய்விக்கின்றனர் அப்படிச் செய்வதன் மூலம் அவர்கள் பெரும் பெரும் நன்மைகளையும், பலாபலன்களையும் அடைந்து வருகின்றனர். கேட்ட வரமருளும் கீர்த்தியுள்ள தெய்வம் இந்த ஜயந்தி நகர் முருகன் என்று அவர்கள் வாயார வாழ்த்துகின்றனர்.

இந்த முருகன் ஆலயத்துக்கு வருகை தந்து பிரார்த்தனை நடத்தாத பிரதம மந்திரிகள் இல்லை என்று கூறலாம் திரு. டி. எஸ். சேனநாயகா காலந் தொடக்கம் பல பல பிரதமர்களும், ஏனைய அமைச்சர்களும் இவ்வாலயத்தை மதித்துப் பூஜை புனஸ்காரங்கள் நடாத்தி வந்திருக்கின்றனர்.

திரு. டட்லி சேனநாயக்கா பிரதம ராயிருந்த போது பல தடவைகள் இந்த ஆலயத்திற்கு விஜயம் செய்திருக்கிறார்.

காலஞ் சென்ற அமைச்சர் திரு. சுகத தாஸ இவ் வாலயத்தில் பிரார்த்தனை செய்தே தமது அரசியல் அலுவல்களையும் தேர்தல் பிரசாரங்களையும் ஆரம்பித்து வந்தார் என்பது பிரசித்தம்.

கடந்த ஆட்சிக்காலத்தின் போது பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா அடிக்கடி இவ்வாலயத்திற்கு வருகை தந்து பூஜையும், பிரார்த்தனையும் நடத்தியிருக்கிறார்.

## பிரதமர் வந்தார்

கும்பாபிஷேககாலை 10 மணிக்கு நமது பிரதம மந்திரியான திரு. R. பிரேமதாஸ கும்பாபிஷேக வைபவத்தில் கலந்து கொண்டு திரு முருக அருட்பிரசாதத்தை பெற்றார். என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும் தமது தேர்தல் தொகுதிக்குள்ளேயே இந்த ஆலயம் இருப்பதையிட்டு திரு.பிரேமதாஸ பெருமகிழ்ச்சியடைகிறார்.

அது மட்டுமன்றி இவ்வாலயம் அமைந்திருக்கும் ஜயந்திநகர் திரு. பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கும் ஒரு கோட்டையாகும்,

தெக்ஷணத்தார் வேளாளர் மகிமை பரிபாலன சொஸைட்டி லிமிட்டெட் என்ற ஸ்தாபனத்தார் இந்த ஆலய நிர்வாகத்தைக் கையேற்ற பின் இரண்டு மகா கும்பாபிஷேகங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஒன்று 1939ம் ஆண்டு நடைபெற்றது.

அதன் பின் 14 ஆண்டுகள் கழித்து 1953ம் ஆண்டில் மற்றுமொரு மகா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.

அப்போது நாட்டின் பிரதமராக விருந்த திரு. டட்லி சேனநாயகா இந்த மகா கும்பாபிஷேக வைபவத்தில் பங்கு கொண்டார்,

1953ம் ஆண்டு நடைபெற்ற மகா கும்பாபிஷேகம் பிறிதொரு வகையிலும் சிறப்புப் பெற்றதாகும், திரு ஆலவாய் என்னும் மதுரையம் பதியில் தற்சமயம் திருஞான சம்பந்தர் ஆதீனகர்த்தராக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிய பரமாச்சாரியர் அவர்கள் கோயில் புனருத் தாரணத் திருப்பணி வேலைகளை ஆரம்பித்து வைத்தார்.

திருக் கும்பாபிஷேக வைபவத்திற்கு சற்று முன்பாகவே அவர் இலங்கையை விட்டு மதுரை சென்று அங்கு ஆதீனகர்த்தராகப் பெரும் பொறுப்பேற்கும்படி இந்த ஜயந்தி நகர் ஸ்ரீ. சிவசுப்பிரமணியர் திருவருள் பாலித்தார்.

## கூட்டுப் பிரார்த்தனை

கூட்டுப் பிரார்த்தனை என்பது ஆதி காலம் தொட்டு இருந்து வந்த போதிலும் அதற்கு இந்திய நாட்டில் பெரும் உத்வேகத்தையளித்தவர் மகாத்மா காந்தி அடிகளாவர். அவர் தமது அரசியல் கூட்டங்களிலே கூட்டுப் பிரார்த்தனையை ஒரு பிரதான அம்சமாக்கினார்.

# வேலை வணங்குவது எமது வேலை

ஆடும்பரியையும் வேலையையும் அணி சேவலையும் பாடும் பணியை விரும்பினார் அருணகிரிநாதர். மயிலையும் வேலையும் சேவலையும் இணைத்துப் பாடுவது ஒரு மரபு. தனித்தனியே அவற்றைச் சிறப்பித்துப் பாடுவதும் முருகன் அடியார்க்கு வழக்கம். அருணகிரிநாதர் மயிலைத் தனிப்பாட்டுக்களால் கந்தர் அலங்காரத்தில் பாராட்டியிருக்கின்றார். வேலையும் சேவலையும் பாடியிருக்கின்றார். மயில் வகுப்பு, வேல் வகுப்பு, என்றும், மயில்விருத்தம், வேல்விருத்தம், சேவல்விருத்தம் என்றும் நூல்களை அருளியிருக்கிறார்.

ஆடும்பரியென்று மயிலுக்கு ஆடும் செயலை அடையாக்கிச் சிறப்பித்தார். மயில் ஆடும்பொழுது அழகும் அருளும், இலங்கும். அணிசேவல் அழகுதரும் சேவல் என்று பொருள் கொள்ளவேண்டும். வீரம் உடையவருக்கு அலங்காரங்கள் பல இருந்தாலும் அவர்களுடைய வெற்றியைக்காட்டும் அணியே மிகச் சிறந்தது. அந்த வெற்றிச் சிறப்பைப் பலருக்கும் எடுத்துகாட்டும் வகையில் ஓங்கி நிற்பது கொடி. அதை வெற்றிக் கொடி என்று சொல்லும் வழக்கம் உண்டல்லவா? வெற்றிமிடுக்குடையார் எங்கே சென்றாலும் தம் கொடியை உயர்த்திக்கொண்டு செல்வர் அதனால் அணி சேவல் என்றார்.

மயிலையும் சேவலையும் அடைமொழிகளால் சிறப்பித்த அருணகிரியார். வேலுக்கு எத்தகைய அடையும் கொடுக்காமல் சொன்னார். அப்படி சொல்லுவது முறையா என்ற ஐயம் தோன்றலாம்.

சிறப்புடைய பொருளுக்குப் பலபல அடையாளங்கள் சொல்லவேண்டியதில்லை. அடையின்றி வழங்குவதனாலே அப்பொருளின் சிறப்புப் புலப்படும். திருக்கோவையாரின் முதற்பாட்டில் பல மலர்வருகின்றன. அங்கேகோங்கு என்று அடைமொழியின்றிச் சொன்னார் மாணிக்கவாசகர் அங்கே உரைகாரர் கூறுவதை இங்கே தெரிந்து கொள்வது நலம். 'மகளிர்க்கு உறுப்பில் சிறந்த உறுப்பாகிய முலைக்கு உவமையாகப் புணர்க்கப்பட்ட கோங்கிற்கு அடை கொடுக்கக் கடவதன்றோ எனின், அடை கொடுப்பின் பிற உறுப்புகளுடன் இதனையும் ஒப்பித்ததாம் ஆகலான் இதற்கு அடைகொடாமையே முலைக்கு ஏற்றத்தை விளக்கி நின்றது அது. முற்கூறிய வகையில் திருக்கோயில், திருவாயில், திருவலகு என்றவற்றிற்கு நாயகராகிய நாயனாரைத் திருநாயனார் என்றதுபோலக் கொள்க'.

மயில், வேல், சேவல் என்ற மூன்றிலும் சிறந்தது வேல். அதன் சிறப்புத் தோன்ற அடை இல்லாமல் நடுநாயகமாக வைத்தால், அதற்குள்ள சிறப்புப் பல. முருகனை வணங்குபவர்கள் வேலில் அவனை ஆவாகனம் பண்ணி வழிபடுவார்கள். வேலைமாத்திரம் வைத்து அதையே முருகனாக வழிபடும் திருக்கோயில் உண்டு. பழம் காலத்தில் காவிரிப்பூப் பட்டினத்தில் அத்தகைய கோயில் ஒன்று இருந்தது. அதை இளங்கோவடிகள் "வேற்கோட்டம்" என்று சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டிருக்கிறார். யாழ்ப்பாணத்தில் செல்வச்சந்நிதி, நல்லூர் முதலிய இடங்களிலும் வேலையே முருகனாகக்கொண்டு வழிபடுகின்றார்கள். முருகனுக்கு ஆறுமும் இருப்பதுபோல வேலுக்கும்ஆறுபடைகள்உண்டு. முருகப்பெருமான் திருவுருவத்தையும் அவன்பால் சார்த்தியிருக்கும் வேலையும் தரிசிக்கும்போது கவனித்தால், அது அவன் அடியையும், கரத்தையும் தொட்டுக்கொண்டு முடியளவும் செல்வதைக் காணலாம். வேலை அடிமுதல் முடிவரையில் கண்ணையோட்டித் தரிசித்தால் முருகனையும் அடிமுதல் முடிவரையில் தரிசித்துவிடலாம்.

வேல்ஞானமே உருவாகப்பெற்றது ஞானசத்தி என்ற பெயருடையது. பராசத்தியால் வழங்கப்பெற்றது. சக்தி அம்சமுடையது. இத்தனைவகையாலும் அதற்கு அமைந்த சிறப்புகளை எண்ணியே அடைமொழியின்றி வேல் என்று மாத்திரம் சொன்னார் அருணகிரியார்.

''ஆடும்பரி எனவும் வேல் எனவும் அணி சேவல் எனவும் பாடும் பணியையே என் வாழ்க்கைப் பணியாக அருள் செய்ய வேண்டும்'' என்று பிரார்த்தனை செய்தார் அவர்.

பாடும் பணியைப் பெரும் பணியாகக் கொண்டே பெருமக்கள் தமிழ் நாட்டில் பலர் இருந்தார்கள். ஞானசம்பந்தர் முதலிய நால்வரும் பன்னிரண்டு ஆழ்வாரும் அந்தக் கூட்டத்தைச் சார்ந்தவர்கள்.

அருணகிரிநாதர் பாடும் பணியை வேண்டிப்பெற்றவர். பிறர் சென்ற வழியே போகாமல் புதிய துறையில் சந்தக்கவிமாரி பொழிந்தவர் அவர். பலபாக்களைப் பாடிய பின்பு பாடியது கந்தர் அநுபூதி அவ்வளவு பாடியும் அவருக்கு மனநிறைவு உண்டாகவில்லை. மீண்டும் "பாடும்பணியே பணியாய் அருள்வாய்'' என்று வேண்டுகின்றார். ஆகவே வேலை வணங்குவது எமது வேலையாகும்.

# முருக நாம பஜனை

| | |
|---|---|
| சரணம் சரணம் | முத்தையா |
| சரவணபவனே | ,, |
| சஞ்சலம் தீர்ப்பாய் | ,, |
| சங்கரி பாலா | ,, |
| வேளூர் வளரும் | ,, |
| வேண்டுவதருள்வாய் | ,, |
| அன்பருக் கருள்வாய் | ,, |
| ஆறுதல் தருவாய் | ,, |
| இன்பமும் தருள்வாய் | ,, |
| ஈஸ்வரி பாலா | ,, |
| உனையே நம்பினேன் | ,, |
| ஊமைக் கருளிய | ,, |
| என்பிழை பொறுப்பாய் | ,, |
| ஏழையைக் காப்பாய் | ,, |
| ஐங்கரன் தம்பி | ,, |
| ஒருமொழி சொல்வாய் | ,, |
| ஓங்காரப் பொருளே | ,, |
| ஔவியம் தீர்ப்பாய் | ,, |

வேல் முருகா, வேல் முருகா,
வேல்முருகா வேல்வேல்

ஆடுமயில் ஏறிவரும் ஆறுமுகனே
பாடுகின்ற பக்தர்களை பார்ப்பவனே நீ
நாடுகின்ற அடியார்கள் நலிவுதீர்த்து
சாடுகின்ற வினைகளெல்லாம்
ஓட அருள்வாய்

# ப ஜ னே

ஆறுமுகம் என்றவுடன்
ஆறுதலுண்டு
ஆறுதலுண்டு மனத்
தேறுதலுண்டு
தேறும் சிவக்கனலை
சிந்தனை செய்தே
செந்தமிழ் முருகனையே
வந்தனை செய்வோம்

வேல் வேல் முருகா
வெற்றிவேல் முருகா
வாவா முருகா
வடிவே லழகா
ஐயா முருகா
அரஹர முருகா
மெய்யா முருகா
வினைதீர் முருகா

ஓம் முருகா
ஓம் முருகா
ஓம் முருகா

1. நமப் பார்பதி பதயே — ஹரஹர மஹாதேவா
2. தென்னாடுடைய சிவனே போற்றி — என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி
3. காவாய் கனகத்திரளே போற்றி — கயிலை மலையானே போற்றி போற்றி

# ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளின் — ஆதீனப் பணிகள்

காலை 5 மணி, மாலை 5 மணி, இரவு 7 மணி — பூஜை வெள்ளிக் கிழமைகளில் 6 காலப்பூஜையும் காலை ஞானசம்பந்தப் பெருமானுக்கு திருமுலைப்பால் உற்சவம்.

**கார்த்திகை தோறும்—** காலை 5 மணி பூஜையில் உற்சவம். மாலை 7 மணி, கார்த்திகை விழா இன்னிசை விரிவுரை திருப்புகழ்க் கச்சேரி 9 மணி வரை. சித்திரைபறுவம், வைகாசி விசாகம், ஆணி உத்தரம், ஆடிப்பூரம் ஆவணி பூசம், நவராத்திரி தைப்பூசம், பங்குனி உத்தரம் விசேஷ பூஜைகள் நடைபெறும்.

**மான்ம்பூ உற்சவம்** காலை 5-30 நடைபெறும்.

**ஸ்கந்தஷஷ்டி** காலை 5-30 மணி, நண்பகல் 12 மணி- மாலை 5-30 மணி. வரத முத்துக்குமார ஸ்வாமி உற்சவம்- மாலை 3 மணி 4 மணி வரைசங்கீத உபந்நியாசம். திருச்செந்தூர்ப்புராணம், கந்தபுராணம், அனுபூதி, அலங்காரம் எதாவது ஒன்று நடைபெறும்.

ஸ்கந்தஷஷ்டி இரவு நல்லூர்க்கந்தன் ஆலயத்தில் விரத உத்யாபன அடியார்கள் விழித்திருக்க.

இரவு 9-30 முதல் 11 வரை<br>இரவு 11-30 முதல் 1 வரை } ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள் விரிவுரை<br>இரவு 1-30 முதல் 3 வரை

மறுநாள் உதயம் 5 மணிப் பூஜையில் ஆதீனச் செலவில் விரத உத்யாபனம் செய்பவர்க்கு மாஹேஸ்வர பூஜை.

**கார்த்திகை சோமவாரம்** ஸ்வாமிகளின் ஆன்மமூர்த்தி மீனுக்ஷி சுந்தரேஸ்வரருக்கு அபிஷேகம் 5-30 மணி உற்சவம்.

**மார்கழி திருவெம்பாவை:** உதயம் 3 மணி சிவசுப்ரபாதம். உதயம் 3-30 மணி- திருப்பள்ளி எழுச்சி.

4 மணி- ஆதீனத்தில் மாணிக்கவாசக ஸ்வாமிகட்கு விசேட பூஜை நடந்து, ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள் மாணவருடன் வீதி பஜனை. 5 மணி: நல்லை சிவன் கோயிலை அடைந்து, நடராஜர் சன்னதியில் மணிவாசகரை எழுந்தருளப்பண்ணி "ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள் திருவெம்பாவை ஓதல்" 6 மணி- ஆதீனத்திற்கு மணிவாசகப் மான் எழுந்தருளி, ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள் திருவெம்பாவை ஓதல் இரவு 7 மணி ஆதீனத்திற்கு மணிவாசகப் பெருமான் திரும்புதல்- அர்த்தஜாமம்.

**திருவெம்பாவை** 6ம் நாள் காலை 6 மணி ஆதீனத்தில் பிட்டுக்கு மண் சுமந்த காட்சி நடைபெறும்.

**திருவாதிரை** காலை ஆதீனத்திலிருந்து சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் சிவன்கோயிலுக்கு எழுந்தருளி, திருவூடல் காட்சி.

| | |
|---|---|
| மாசி சிவராத்திரி— | 4 ஜாமமும்- விசேஷ அபிசேகம் பூஜை, பஜனை, சங்கீத உபந்நியாசம். |
| சித்திரை திருவாதிரை | மாலை 4 30 மணி ஞானசம்பந்த மஹோற்சவம் |
| | 1ம் நாள் ஞானப்பால் பெறல் |
| | 2ம் ,, பொற்தாளம் பெறல் |
| | 3ம் ,, மறைக்கதவும் திறந்தலும் அடைத்தலும் |
| | 4ம் ,, பொற்கிழி பெறல் |
| | 5ம் ,, முத்துப்பல்லக்கு, முத்துக் குடை பந்தர் பெறல் |
| | 6ம் ,, கோளறுபதிகம் பாடல் |
| | 7ம் ,, பாண்டியன் சுரம்தீர்த்தல் |
| | 8ம் ,, பூம்பாவைக்கு உயிர்கொடுத்தல் |
| | 9ம் ,, உபநயனம் |
| | 10ம் ,, திருக்கல்யாணம் சிவஜோதிஐக்கியம். |

10 நாளும் இரவு திருநெறிய தெய்வீக மஹாநாடு நடைபெறும் மாதர் அரங்கு, இளைஞர் அரங்கு, அங்கங்கள், கருத்தரங்கு, கவியரங்கு, பட்டிமன்றம், பண்ணிசை, விரிவுரை, இடம்பெறும்.

## விழாக்கள்

1 நல்லூர்க் கந்தஸ்வாமி கோயில் 26 நாள் விழாவிலும் ஆதீனத்தில் கதிர்வேலாயுத ஸ்வாமிக்கு உற்சவமும் அடியார்கட்கு அன்னதானமும் நடைபெறும்.

2 தியாகப்பிரம்ம மஹோற்சவம் 3 நாள் நடைபெறும்.

3 ஆதீனத்தில் நடைபெறும். அண்ணாமலை இசைத் தமிழ்மன்ற இசை வகுப்புக்கள் ஆதரவில்

## தமிழ் இசை விழா 10 நாட்கள் நடைபெறும்.

4 மாதப் பௌர்ணமி தோறும் ஆதீனப் பொறுப்பில் பண்ணிசைக் கச்சேரி

5 எல்லா ஆலய விசேட உற்சவத்திலும் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள். தலைமையில் பண்ணிசை மாமன்றத்தினர் திருவீதி வலம் வந்து பண்ணிசை பாடுவர்.

6 தினம் காலைப் பூஜை முடிந்தவுடன் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளுடன் மாணவர்கள் பன்னிரு திருமுறை ஓதுவர்கள்.

## சமயப்பிரசாரம்

சிறு ஆலயங்கட்கு கிராமம்தோறும் சென்று ஒவ்வொரு மாதம். ஆலய விழாக்களில் படக்காட்சி சொற்பொழிவு, பண்ணிசை இலவசமாக ஆதீனக் கணக்கில் செய்யப்படும்.

## யாத்திரை

வருடத்தில் ஒருமுறை திருக்கேதீச்சரம் கோணேஸ்வரம் தலங்கட்கு அடியாருடன் யாத்திரை மேற்கொள்ளப்படும்.

ஆதீன ஓதுவாமூர்த்தி.
திருமுறை இசைமணி,
S. தில்லைமணி,

# ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகட்குச் சிங்கையில் பிரியாவிடை

சிங்கப்பூர், இந்து அறக்கட்டளைக் கழக அழைப்பில் சமயப்பணி மேற்கொண்டு சென்ற நல்லை ஞானசம்பந்தராதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகட்கு சிராக்கூன்ரோட் காளி கோவிலில் மகத்தான பிரியாவிடை அளிக்கப்பட்டது. பேரருள் வள்ளல் திரு P. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகட்கு பொன்னுடை போர்த்தி வரவேற்றார். சிங்கப்பூர் செண்பக விநாயகராலயம்; டாங்ரோட் நகரத்தார் கோயில், சௌத்பிறிட்ஜ் ரோட் மாரியம்மன் கோவில், பெருமாள் கோவில், நேவல்பேஸ் முருகன் கோயில், லூட்லன்ஸ் அரசகேசரி சிவன் கோயில் முதலிய தேவஸ்தானர்கள் சார்பிலும், இந்து அறக்கட்டளைக் கழகச் சார்பிலும் மாலைகள் போடப்பட்டு பாராட்டுரைகள் பேசப்பட்டன. மறுநாள் (30–5-78) விமான நிலையத்தில் திரளானமக்கள் வழியனுப்பி வைத்தனர். 2 மணிநேரம் தாமதமானதால் அதிகாலை 3 மணிக்கு விமானம் கட்டுநாயக்கா அடைந்தது. அந்த அகால நேரத்திலும் பிரதம சுங்கத்தடுப்பு உதவி அதிகாரி கலாரசிகமணி, சிவநெறித் தொண்டர் திரு. K. K. சுப்பிரமணியமும் குறிப்பிட்ட சில அன்பர்களும் ஸ்வாமிகளை வரவேற்றனர். ஸ்வாமிகள் நேரே ராமகிருஷ்ண மிஷன் சென்று தங்கினார். அங்கு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் அதிபர் ஸ்வாமி பிரேமாத்மானந்தஜி, ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகட்கு பொன்னுடை போர்த்தி பொற்கிளி வழங்கினர். மூன்று தினம் மிஷன் மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளின் அருளுரைகள் நடைபெற்றன.

—**செல்வன்**

# ஆதீன அருட்பணிகள்

**இலவச திருமுறை வகுப்பு**

*சனி, ஞாயிறு தோறும் மாலை 4 மணி முதல்*
*6 மணிவரை நடைபெறுகிறது.*
*ஆதீனப் பண்ணிசைப்புலவர்*
**திரு. எஸ். ஆர். திருஞானசம்பந்தன்**
*மேற்படி வகுப்புகளை நடத்துகின்றார்.*

---

**சைவ சித்தாந்தப் பயிற்சி நெறி**

*ஞாயிறு தோறும் காலை 9 மணி முதல்*
*12 மணிவரை நடைபெறுகிறது.*
*சைவசித்தாந்தசாகரம்*
**பண்டிதர் திரு. கந்தையா அவர்கள்**
*மேற்படி வகுப்பை நடத்துகின்றார்.*

---

**யோகாசன வகுப்பு**

*காலை 5.30 மணி மாலை 5.30 மணி*
*தினம் நடைபெறுகிறது*
**ஸ்ரீ சிதானந்த யோகி**
*மேற்படி வகுப்பை நடத்துகின்றார்.*

---

*ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளின் அருளாணைப்படி எல்லா வகுப்புகளும் இலவசமாக நடைபெறுகிறது என்பதை அறியத்தருகின்றோம்.*

## ஆதீனப் பன்னிரு திருமுறைப் பண்ணிசை மன்றம்

மேற்படி மன்றம் தினம் காலைப் பூஜை முடிந்தவுடன், பூஜை முகத்தில் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள் தலைமையில் பன்னிருதிருமுறை ஓதுவார்கள். விசேட ஸ்தலங்களில் உற்சவம் நடைபெறும் போதும் அவ்விடம் சென்று பன்னிரு திருமுறை ஓதுவார்கள், திருக்கேதீச்சரம், கோணேச்சரம், மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி உற்சவகாலத்தில் மன்றத்தினர் சென்று பன்னிரு திருமுறை ஓதி வருகின்றனர்.

நல்லூர்க் கந்தன் உற்சவத்தில் தினமும், பன்னிரு திருமுறை வீதி பஜனை ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள் தலைமையில் நடைபெறும்.

## அகில இலங்கைத் திருப்புகழ் மாமன்றம்

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளைப் போஷகராகக் கொண்டுள்ள மேற்படி மன்றம் மாதக் கார்த்திகை தோறும், ஆதீனத்தில் திருப்புகழ் கச்சேரிகள் விரிவுரைகள் நடத்துவர்.

## அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம்

சிதம்பரம் அண்ணாமலைச் சர்வகலாசாலையில் சங்கீத பூஷணம் பட்டம் பெற்ற பட்டதாரிகள் மேற்படி மன்றப் பெயரில் இசை வகுப்புகள் சிறப்புற நடாத்தி வருகின்றனர். வயலின். மிருதங்கம், வாய்ப்பாட்டு ஆகியவை சிறந்த முறையில் பயிற்றப்படுகிறது. வருடந்தோறும் மேற்படி மன்றம் ஆதினத்தில் தமிழ் இசை விழாவை நடத்தி வருகிறது.

இலங்கை, யாழ்ப்பாணம், நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
அறுபதாண்டு நிறைவு எய்திய அருள்நிறை நன்னாள்,
மலேசியத் தலைநகரான கோலாலம்பூர் மாநகரில் கொண்டாடப்பெற்றபோது
மனமுவந்து பணிந்து வழங்கிய

# மணிவிழா வாழ்த்துரை

**சீலம் செறிந்த சிவநெறிச் சான்றோய்!**

செந்தமிழும் சிவநெறியும் செழிந்தோங்கும் வண்ணம், இலங்கை யாழ்ப்பாணத்தில், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் அவர்கள் தோன்றிய நல்லூர் என்னும் நலமிகு தலத்தில், அருள்மிகு கந்தசாமிக் கடவுளின் அருளினால், சைவ நல் அந்தணர் குலத்தில் வந்துதித்த பெருந்தகையோய்! சீலமும் கோலமும் சிறந்து, ஞாலம் புகழ்ந்து போற்ற விளங்கும், தவநலம் பொலியும் புண்ணிய முனிவர் பெரும்! இறைவனின் அருளால் தாங்கள் அறுபதாண்டு நிறைவு பெற்று, மணிவிழா கொள்ளும் மாட்சிமை அறிந்து, மிகமிக மகிழ்ச்சியுறுகின்றோம். அதிலும் கடல் கடந்த மலேசிய மாநகரில், தங்கள் மணிவிழா சிறப்புறக் கொண்டாடப்பெறுவது குறித்து, இங்கு நாங்கள் எல்லோரும் எல்லையில்லா மகிழ்ச்சி எய்துகின்றோம்!

**நல்லை ஆதீனத்தின் நற்பெருந் தலைவ!**

இலங்கை யாழ்ப்பாணத்தில், நலம்பல வாய்ந்த நல்லூர்ப் பெருந்தலத்தில், சிவ நெறிப் பெருந் தலைவராம் திருஞானசம்பந்தப் பெருமானின் திருப்பெயரால், இறையருள் துணைகொண்டு, நிறைபெறும் சிறப்பின் மிக்க, சிறந்ததோர் ஆதீனம் தோற்றுவித்து நிறுவி வளர்த்துவரும், தங்களின் அருமை பெருமை மிக்க, செந்தமிழ்ச் சிவ நெறித் தொண்டுகள், யாவரும் வியந்து போற்றத் தக்கனவாகும். தமிழகத்தில் மதுரைமா நகரின்கண் அமைந்த திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் குருமகா சந்நிதானம் திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் அருளாசிபெற்ற தாங்கள், யாழ்ப்பாண நல்லூரில் திருஞானசம்பந்தர் ஆதீனம் தோற்றுவித்தருளிய மாட்சி, பெரிதும் போற்றதற்குரிய மாட்சிமைமிக்கதாகும்.

**நாளும் இன்னிசையால் ஞான நன்னெறி பரப்பும் நல்லோய்!**

அன்பும் அருளும் ஓர் உருவாக அமைந்தது போன்ற, பண்புநலங்கள் பலவும் ஒருங்கு திரண்ட, சிறந்த நல்ல பெருந்தகையோய்! தங்களின் இனிய இசை நலனும், கதை அம்சமும் கலைத்திறனும் அவையினர் அனைவரையும் மகிழ்விக்கவல்ல ஆற்றலும் நண்பர்களிடமெல்லாம் எளிமையாகக் கலந்து, இனிமையாகப் பழகும் பாங்கும், நியமம் தவறாத நவபூசைச் சிறப்பும், இணையற்ற புலமைப் பெருக்கும் பிறவும் எவ்வளவு பாராட்டினாலும், எஞ்சி நிற்கும் ஏற்றம் உடையனவாகும். தங்களைப் போன்ற தவ நலஞ்சான்ற, அருங்குணங்கள் பொருந்திய பெருந்தகைமை முனிவர் ஒருவரை, இந்நாளில் காண்பது அரிது. தாங்கள் எல்லாம் வல்ல, நம் சிவபெருமான் திருவருளால் பல்லாண்டு நீடூழி வாழ்ந்து, பவள விழா, முத்து விழா, நூற்றாண்டு விழா முதலிய சிறப்பு விழாக்கள் பலவும் கொண்டு, ஞாலமெலாம் நம் சைவமும் தமிழும் நலமுறத் தழைத்தோங்க வளர்ந்து வருதல் வேண்டுமென்று, மனமார விரும்பி வேண்டி, இம் மணிவிழா நன்னாளில், தங்களைப் பணிந்து வாழ்த்தி வணங்கி மகிழ்கின்றோம்.

வாழ்க! வாழ்க! வணக்கம்!
போற்றி! போற்றி!!

திருக்கோயில்
ஆசிரியர்,
நா. ரா. முருகவேள்.

சென்னை.

# கந்த சஷ்டி

## ஒரு குறையும் வராதிருக்க மேற்கொள்ளும் விரதம்

நம் நாட்டில் மக்கள் பற்பல விரதங்களை மேற்கொள்கின்றனர். அவற்றுள் முக்கியமானவை விநாயக சதுர்த்தி, நவராத்திரி (சரஸ்வதி பூஜை), கந்தர் சஷ்டி, சிவராத்திரி, என்பன.

இவை முறையே கணபதி, அம்பிகை, முருகன், சிவபெருமான் குறித்துச் செய்யப்படுபவை. இந்த விரதங்களை முன்னிட்டு சிவாலயங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. முருகப்பெருமானுக்குரிய விரதங்கள் மூன்று வகையாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன. அவை வார விரதம், நட்சத்திர விரதம், திதி விரதம் என்பன சம்பந்த சரணலய சுவாமிகள்.

வெள்ளியே னுந்தின மாரல
தன்றியும் வென்றி யுறுந்துலையா
மொள்ளிய திங்களி லிந்து
வளர்ந்திட வோங்குமுன் வைகன்
வெள்ளரி தாமறு தாளு [முனு
மெழற்பர சேந்திய வேந்தறரும்
வள்ளன் மகிழ்ந்தருள் விரத
மெனப்புகழ் மாதவ னேதியரோ'

என்று கந்தபுராணச் சுருக்கம் என்ற நூலில் கூறியுள்ளார்.

ஒவ்வொரு வாரத்திலும் வரும் வெள்ளிக்கிழமையன்று முருகப்பெருமானை வழிபட்டு விரதமிருப்பது வார விரதம். ஒவ்வொரு மாதத்திலும் வருகிற கார்த்திகை நட்சத்திரத்தன்று கொள்வது நட்சத்திர விரதம். திதி பிரதமாவது ஐப்பசி மாதத்தில் வரும் வளர்பிறைச் சஷ்டியன்று மேற்கொள்வது. முருகப்பெருமான் சூரபன்மனை அழித்த நாள் இந்த நாள்தான். இதனையே கந்தபுராணம் கந்தவிரதப் படலத்தில்,

வெற்பொடும் அவுணன் தன்னை
வீட்டிய தனிவேல் செங்கை
அற்புதன் தன்னைப் போற்றி
அமரரும் முனிவர் யாரும்
சொற்படு துலையின் திங்கள்
சுக்கில பக்கந் தன்னில்
முற்பகல் ஆதி யாக
மூவிரு வைகல் தோற்றூர்

என்று கூறப்பட்டிருக்கிறது. ஐப்பசி மாதம் வளர்பிறைச் சஷ்டியைக் கடைசி நாளாகக் கொண்டு திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இந்த நாளில்தான் விழாவை நடத்த வேண்டுமென்பதை ஸ்கந்த தோத்துவ விதிப் படலத்திலும், கௌசிகப் பிரச்னகுமார தந்திரத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

பொதுவாக ஒவ்வொரு மாதத்திலும் வருகிற வளர்பிறைச் சஷ்டியிலும், கார்த்திகை நட்சத்திரத்திலும் உபவாச மிருக்கலாம். சிறப்பாக ஐப்பசிமாதக் கந்தர் சஷ்டியில் ஆறு நாட்கள் உணவருந்தாதிருந்து விரதத்தைக்கடைப்பிடிக்கலாம். இந்த ஆறு நாட்களிலும் முருகன் புகழ் நூல்களான திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தர் அநுபூதி, கந்தர் அலங்காரம், சுந்த சஷ்டிக் கவசம் முதலிய நூல்களை ஆசாரத்துடன் ஓதிவரும் வழக்கமும் நம் நாட்டில் இருந்து வருகின்றது. இதுவன்றி கந்தபுராணத்தைப் பெரியோர்கள் படிக்க கேட்டும், தாமே படித்தும் விரத நாட்களைக் கழிப்பதும் உண்டு மேற்சொன்ன எல்லா வகை விரத நாட்களிலும் மக்கள் காலையில் நீராடி நித்தியக் கடன்களை முடித்து, ஆலயம் சென்று முருகப்பெருமானை வழிபட்டால் இம்மையில் எல்லா நன்மைகளையும் பெற்று, மறுமையில் பேரானந்தப் பெருவாழ்வை அடைவார்கள் என்று கந்த புராணம் கூறுகிறது.

புலவர் ஒருவரைப் பார்த்து குடம், சட்டி இவற்றை வைத்து ஒரு பாடல் பாடச் சொன்னார் ஒருவர் முருக பக்தரான புலவர் 'குக்குடத்தைப் பிடித்தவன் சட்டியை நோக்கக் குறையில்லையே' என்று முடியும் செய்யுளைப் பாடினார்.

குக்குடம் கோழி கோழிக்கொடியைப் பிடித்த முருகனின் சஷ்டியை அனுஷ்டித்தால் ஒரு குறையும் வராதென்வது அதன் பொருள்.

கந்தபுராணம் நம்முடைய சொந்த புராணம் நம்மிடத்தேயுள்ளசூரபன்லாதியரான ஆணவ, கன்ம, மாயா மலங்களில் உழன்று அல்லற்படாமல் அவற்றினின்று விடுபட்டு வீட்டைய வேண்டுமென்ற தத்துவத்தையே கந்தபுராணம் அடிப்படையாகக் கொண்டுள்ளது, ஆகையால் நாம் எல்லோரும் அந்த கந்தசஷ்டி விரதத்தை முறைப்படி கடைபிடித்து பரங்கருணைத் திருவருளுக்குப் பாத்திரமாவோமாக!

முடியாப் பிறவிக் கடலில்
புகார்குழு துங்கெடுக்கும்
மிடியார் படியில் விசனப்
படார் வெற்றி வேற்பெருமான்
அடியார்க்கு நல்ல பெருமான்
அவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மான்திரு
நாலம் புகல்பவரே

கந்தரலங்காரம்

உ

குருபாதம்

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன

# பன்னிரு திருமுறைப் பண்ணிசை மாமன்றப்

# பண்ணிசை மாமணிப் பட்டப் பரீட்சை

ஈழத்திருநாட்டின் கண்ணே சைவத்தையும், திருமுறைகளையும் போற்றிப் பணி புரிந்து வருகின்ற நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ பரமாச்சார்ய ஸ்வாமிகளின் திருவுளப் பாங்கின் வண்ணம், ஆதீன பன்னிரு திருமுறைப் பண்ணிசை மான்றம் அகில இலங்கை ரீதியில், பண்ணிசை மாமணிப் பட்டப் பரீட்சையை நடாத்தி வருவதை ஈழம் வாழ் சைவத் தமிழ்ப் பெருமக்கள் நன்கறிவர். 1976ம் ஆண்டு முதலாவது ஆண்டுப் பரீட்சை நடைபெற்றது.

இப் பரீட்சைக்குப் பன்னூற்றுக் கணக்கானவர்கள் தோற்றினர். பரீட்சையிற் சித்தியெய்தியவர்களுக்குத் தகைமைப் பத்திரங்களும், விசேட சித்தியில் முதன்மையான இடத்தைப் பெற்றவர்கள் மூவருக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

## பரீட்சை விபரங்கள்

1. நான்கு ஆண்டுத் திட்டத்தில் இப் பரீட்சை நடாத்தப்பெறும்.

2. முதலாவது ஆண்டுப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியெய்தியவர்களே இரண்டாவது ஆண்டுப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி பெற்றவர்களாவர்.

3. பரீட்சைக்குத் தோற்றுபவர்களுடைய வயதின் பிரகாரம் மூன்று பிரிவுகளாகப் பிரித்து இப் பரீட்சை நடைபெறும்.

4. செயல்முறைப் பரீட்சை (வாய்ப்பாட்டு), எழுத்துப் பரீட்சை ஆகிய பிரிவுகளாக நான்காண்டிலும் பரீட்சை நடைபெறும். திறமை மிக்க மூவர்கொண்ட பரீட்சைக்குழு இப் பரீட்சையை நடாத்தும். இறுதி ஆண்டுப் பரீட்சையை, தமிழகத்தின் திருமுறை இசைவாணரை அழைத்து நடாத்த ஒழுங்கு செய்யப்படும்.

5. பாடத்திட்டத்திலுள்ள திருமுறைகள் சம்பந்தமான வினாக்கள் எழுத்துப் பரீட்சையில் இடம்பெறும். பாடியவர், பாடப்பெற்ற தலம், சந்தர்ப்பம் ஆகியன போன்ற வினாக்களும், நாயன்மார்கள் நால்வர் சரிதைகளிலிருந்து சில வினாக்களும் இடம்பெறும்.

## நல்லை ஆதீனப் பணிகளுக்கு

# அறக்கட்டளை தரும் அன்பர்கள்

நல்லை ஆதீனத்தில் சுவாமிகளின் மேற் பார்வையில் அநேக சமயப் பணிகள் நடைபெறுகின்றன.

திருவிழாக்கள். சைவ சித்தாந்தப் பயிற்சி, பண்ணிசை வகுப்பு, யோகாசன வகுப்பு, பன்னிரு திருமுறைப் பயிற்சி ஆகியவை செம்மையாக, தக்க ஆசியர்களைக்கொண்டு நடத்தப்பட்டுவருகின்றன.

ஆதீனத்தில் நடைபெறும் திருவிழாக்களையும் இலவச வகுப்புகளையும் நடத்துவதற்குப் பொருளுதவிகள் தேவைப்படுகின்றன.

இலங்கை, தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலுள்ள நல்லைக் குருமணியின் அன்பர்கள் பல அறக் கட்டளைகள் மூலம் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்துவருகின்றனர்.

இவர்களின் இந்த உதவியினால் நல்லூர் ஆதீனம் தமிழுக்கும் சமயத்திற்கும் அரும் சேவையாற்றும் நிலையமாகத் திகழ்கிறது.

அறப்பணிகளுக்கு உதவி நல்கிவரும் அன்பர்களின் விபரம் வருமாறு:

### ஈழத்து அன்பர்கள்

வி. டி. வி. தெய்வநாயகம்பிள்ளை,
கொட்டாஞ்சேனை – கடைசி சோமவாரம்

கே. கே. சுப்பிரமணியம்
தெஹிவளை – ஆனி உத்தரம்

எம். கே. மயில்வாகனம்
யாழ்ப்பாணம் – ஆவணி மூலம்

எஸ். சத்தியமூர்த்தி, நல்லூர்
– திருவெம்பாவை 6ம் நாள் (பிட்டு உற்சவம்)

### தமிழ் நாட்டு அன்பர்கள்

முத்துப்பழனியப்பச் செட்டியார்,
மதுரை – நித்திய பால் பூஜை

எம். ஆர். தாமோதர முதலியார்,
தியாகராயநகர், சென்னை
– மாத திருவாதிரை, ஞானசம்பந்தர் உற்சவம்

திருமதி விஸ்வநாதன் – சுக்கிர வாரம்

### சிங்கப்பூர் அன்பர்கள்

எஸ். எம். வாசகர்,
சிங்கப்பூர் – சுந்தரர் குருபூஜை

எஸ். எஸ். சர்மா – மாதாந்திர பண் இசை அரங்கு
சிங்கப்பூர்

### மலேசியா அன்பர்கள்

எஸ். ரத்ன சர்மா,
கோலாலம்பூர் – பூம்பாவை உற்சவம்

திருமதி அன்னலட்சுமி ஞானேஸ்வரன்,
கோலாலம்பூர் – ஞானசம்பந்தர் குருபூஜை

(தொடரும்)

# அறக்கட்டளை ஏற்பாடு முறை

நல்லூர் ஆதீனத்தின் பெயரில் ஆயிரம் ரூபாய் நிதி உதவினால் அதனை வைப்பு நிதியாகக் கொள்ளப்படும். இதில் கிடைக்கும் வட்டியைக் கொண்டு ஆண்டு தோறும் அவர்கள் பெயரில் அறக் கட்டளைகள் நிறைவேற்றப்படுவதுடன், பிர சாதங்களும் அனுப்பிவைக்கப்படும்.

கீழ்க்கண்ட திருநாட்களை நல்லூர் ஆதீனமே நடத்திவருகிறது. இவற்றில் எதனையாவது ஏற்று நடத்த முன்வரும் அன்புள்ளம் படைத்தோர் ஆயிரம் ரூபாய் அனுப்பி தங்கள் பெயரில் அறக் கட்டளையை ஆண்டுதோறும் நடத்த முன்வரலாம்.

- சித்திரா பருவம்
- வைகாசி விசாகம்
- அடிப்பூரம்
- ஆவணி நல்லைக்கந்தன் உற்சவ அன்னம் பாலிப்பு
- நவராத்திரி 9 நாட்கள்
- ஸ்கந்த சஷ்டி
- திருவெம்பாவை
- தைப்பூசம்
- மாகசிவராத்திரி 4 ஜாமம்
- பங்குனி உத்தரம்
- மங்கையர்க்கரசி குருபூஜை
- காரைக்காலம்மையார்குருபூஜை
- மெய்கண்டதேவர் குருபூஜை

இவற்றில் எதனையாவது ஏற்று நடத்த விரும்புவோர் தொடர்புகொள்ளலாம். மற்றும் பண்ணிசை வகுப்புகளை நடத்துவதற்கும் உதவும் உள்ளம் படைத்தோர் வரவேற்கப்படுகின்றனர்.

ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் (இளைய குரு)
ஆதீன அறக்கட்டளைச் செயலாளர்
நல்லூர் ஆதீனம்,
நல்லூர், சிறிலங்கா

6. கூடிய புள்ளிகள் பெறும் மூவருக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

7. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, கண்டி, கொழும்பு ஆகிய பகுதிகளில் இப் பரீட்சை ஒழுங்கு செய்யப்படும்.

8. ஒவ்வொரு ஆண்டிலும் ஆனி மாதத்தில் இப் பரீட்சை நடைபெறும்.

9. பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு, ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளின் பீடாரோகண விழாவின்போது தகைமைப் பத்திரங்களும், பரிசில்களும் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளால் வழங்கப்படும்.

10. பரீட்சைப் பாடத்திட்டத்திற்கமைய, ஆதீனத்தில் ஒவ்வொரு சனி, ஞாயிறு தினங்களிலும் மாலை 3 மணிமுதல் 5 மணிவரை இலவச பண்ணிசை வகுப்பு நடைபெற்று வருகிறது.

# பண்ணிசை மாமணிப் பட்டப் பரீட்சை
# ஆணைக்குழு

1. குருமகா சந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாததேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள்.
2. ஆதீன மகா வித்வான், சைவ சித்தாந்த சாகரம், பண்டிதர், திரு. மு. கந்தையா.
3. ஆதீன சமயப்பணிப் பொறுப்பாளர், திருப்பணித் தவமணி. திரு. S விஜயானந்தன்
4. சிவநெறிச் செம்மல், திரு. எஸ. சத்தியமூர்த்தி B. Sc., J. P. (ஆதீன மேலாளர்) அதிபர், யாழ், கொட்டடி ஸ்ரீ மீனாட்சி வர்த்தகக் கல்லூரி.
5. சங்கீத பூஷணம், பண்ணிசை மாமணி, கல்வயல், திரு. எஸ. விஞசித்தம்பி (இளைப்பாறிய இசையாசிரியர்)
6. ஆதீனப் பண்ணிசைப் புலவர், பன்னிரு திருமுறைப் பண்ணிசை மாமன்றச் செயலாளர், பண்ணிசை வேந்தன், பண்ணிசைச் செல்வன், திரு. S. R. ஞானசம்பந்தன் (ஆதீனப் பண்ணிசை வகுப்பு, காரைநகர் கடம்பவன் முருகன் ஆலய சண்முகானந்த சபா, யாழ், கொய்யாத்தோட்டம் திருப்பணிச் சபை, பண்ணிசை ஆசிரியர்)

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளின் அருளாணைப்படி,

எஸ். ஆர். திருஞானசம்பந்தன்
செயலாளர், ஆதீனப் பன்னிரு திருமுறைப்
பண்ணிசை மாமன்றம்

# உபந்நியாசங்களின் உறைவிடம்

## ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்

கொழும்பு மாநகரின் வட பால் மிகவும் பழமை வாய்ந்த ஜிந்துப்பிட்டி, ஜயந்திநகர் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலின் புதிய இராஜகோபுரத்தினதும், கோவிலினதும் மஹா கும்பாபிஷேகம் அண்மையில் வெகு சிறப்பான முறையில் நடைபெற்றது. நவாலி, அட்டகிரி கந்தசாமி கோவில், யாழ்ப்பாணம், பெருமாள் கோவில்களின் பிரதான சிவாச்சாரியாரான பிரதிஷ்டா சிரோன்மணி சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்கள் பிரதிஷ்டா சிவாச்சாரியாராக இருந்து கும்பாபிஷேகத்தைச் செய்து வைத்தார். இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாக சிந்து நாகரீக பீடாதிபதி பேராசிரியர் சிவஸ்ரீ. கா. கைலாசநாதக்குருக்கள் அவர்களும், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததும், பேரருள் கொண்டதுமான முனீஸ்வரர் தேவஸ்த்தான தர்மகர்த்தாவும், பிரதம சிவாச்சாரியாருமான சிவஸ்ரீ. இரத்னகைலாசதக்குருக்கள் அவர்களும் கும்பாபிஷேகம் தொடர்பான விஷயங்களையும் செவ்வனே கவனித்து சர்வபோதகாச்சார்யார்களாக விளங்கிக் கும்பாபிஷேகத்தை நடாத்தி வைத்தமை சிறப்பாக இருந்தது. சுருங்கக் கூறின் ஒரு பக்தி பரவசமான கும்பாபிஷேகத்தைச் சகலரும் கண்டு களித்தார்கள்.

**கோவில் மூர்த்தி**

ஜிந்துப்பிட்டி, ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் புதிய இராஜகோபுரத்தையும், உள்ளே உள்ள பிள்ளையாரையும் கும்பிட்டு உட்சென்றால் மூலமூர்த்தியாகிய முருகப் பெருமானைத் தரிசிக்கலாம்.

இலங்கையில் வேறு எக் கோவிலுக்கும் இல்லாத ஒரு தனிச் சிறப்பு இக் கோவிலுக்குண்டு அதாவது சிவகுருநாதன் ஆகிய முருகன் மூலமூர்த்தியாக உள்ளான். முருகனுக்கு வலப்பாகத்தில் உள்ள கோவிலில் முருகனிடம் உபதேசம் பெற்ற தகப்பனான சிவனும், இடப்பாகத்தில் உள்ள கோவிலில், தாயாகிய உமை அம்மையும் வீற்றிருந்து, தமது இளைய மைந்தனது அருட் சக்திகளை வியந்து கொண்டும், தாமும் அருள்பாலித்துக் கொண்டும் உள்ளார்கள்.

**உபந்நியாசங்கள், கூட்டுப் பிரார்த்தனைகள்**

பண்டு தொட்டு இலங்கையில் வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் கூட்டுப் பிரார்த்தனைகளும், சங்கீத உபந்நியாசங்களும் இக்கோவிலில் நடைபெறுவது வழக்கம். திருமுருக கிருபானந்தவாரியார், ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் (பூர்வாசிரமத்தில் வித்வான் C. S. S. மணிபாகவதர்) புராண இதிகாசங்களைத் தொடர்ப்பிரசங்கங்களாக இக்கோவிலில் செய்தமையால் உபந்நியாசங்கள் இக்கோவிலுக்கே உறைவிடமாக அமைந்தன.

**முப்புராண பெருவிழா**

ஜிந்துப்பிட்டி, ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலின் கும்பாபிஷேகத்தை வெகு சிறப்பாகச் செய்து வைத்த மேற்படி கோவில் தர்மகர்த்தாக்கள், புராண இதிகாசங்களின் உண்மைகளையும் அவைகளிலே பொதிந்து கிடக்கும் சைவ சித்தாந்த முடிபுகளையும் பக்தர்களுக்கு விளக்க வேண்டும் என்ற பெருநோக்குடன் முப்புராண விழாவை ஆரம்பித்துள்ளார்கள்.

பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் ஆகிய முப்புராணங்களில் உள்ள தத்துவங்கள் யாவும் இப்போது நல்லை, திருஞான சம்பந்தர் ஆதீனகர்த்தர், சிரிலசிரி சுவாமிநாத ஞானசப்பந்த பராமாசார்ய சுவாமிகள் அவர்களால் தினமும் விளக்கப்பட்டு வருகின்றன. பெருந்திரளான பக்தர்கள் தினமும் கோவிற் பூசைகளிலும் பின்னர் முப்புராண விழாவிலும் கலந்து கொள்கிறார்கள்.

